# தமிழர் அறிவாராய்ச்சியியல்: ஒரு சுருக்கப் பார்வை

கே. கணேசராஜா

தமிழர் அறிவாராய்ச்சி வரலாறு இதுவரை ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வுத்துறையாக இல்லை. இது தொடர்பாக சில முன்னோடி முயற்சிகள் வெளிவந்துள்ளன. இந்தியாவைச் சேர்ந்த குணா என்பவருடைய தமிழர் மெய்யியல் (1980) என்ற நூலும், நாராயணன் என்பவருடைய தமிழர் அறிவாராய்ச்சியியல் என்ற இரண்டையும் குறிப்பாக எடுத்துக்காட்டலாம். இவை தவிர சித்தர்கள் பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் நூல்கள் வெளிவந்துள்ளன. இதுவரை தமிழர் சிந்தனை வரலாற்றை ஒரு முறைப்படுத்திய ஆய்வாக எவரும் மேற்கொள்ளவில்லை. தமிழர் சிந்தனை வரலாற்றில் சைவசித்தாந்தம் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. கலாநிதி பொன்னையா என்பவர் சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் என்ற பெயரால் நிகழ்த்திய கலாநிதிப் பட்டம் ஆய்வு நூலாக வெளிவந்தது. கலாநிதி ராமகிருஷ்ணன் என்பவருடைய ஆய்வும் சிவஞான சித்தியாரின் பரபக்கத்தை ஆதாரமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட ஆய்வு நூலாக வெளிவந்தது. இது தவிர சிவராமன் என்பவர் ஆங்கிலத்தில் Sivasidantam எனும் நூலை எழுதினார். இவ்வாறு தமிழர் சிந்தனை மரபில் சிறிய பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டாலும் இன்று வரை முறைப்படுத்தப்பட்டதும் விரிவானதுமான ஒரு ஆய்வு வெளிவரவில்லை என்றே கூற வேண்டும். எனவே மெய்யியல் மாணவர்களுக்கு விரிவான ஆய்வுக்களமாக இத்துறை இருப்பதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழர் அறிவாராய்ச்சி வரலாற்றை கட்டியமைப்பதிலுள்ள தலையாய பிரச்சினை மெய்யியலுக்கு நாம் எத்தகைய விளக்கத்தை கொடுக்கப்போகிறோம் என்பதே, மெய்யியலை ஒரு உலக நோக்காகவும் ஒரு கருத்து நிலையாகவும் நாம் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் நாம் தமிழர் மெய்யியல் வரலாற்றை முக்கியப்படுத்தக் கூடும். எனினும் தமிழர் மெய்யியல் வரலாற்றை முறைப்படுத்தப்பட்ட மெய்யியல் ஆய்வாக விரித்துக் கூறும் நூல் எதுவும் இல்லை. எனவே மேற்குலக மெய்யியல் மரபில் இந்திய மெய்யியல் மரபை பொதுவாக மெய்யியல் சிந்தனையாகவோ அல்லது தனி மெய்யியல் சிந்தனையாகவோ விரித்துக் கூறும் சித்தாந்த நூல்கள் எதுவும் இல்லை. சைவ சித்தாந்த நூல்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கும். மெய் கண்ட சாஸ்திரம் 12ஆம், 14ஆம் நூற்றாண்டுக்கு இடையில் இருப்பின் இது தொடர்பான மெய்யியலாய்வு 18ஆம் நூற்றாண்டு வரை நிகழ்த்தப்படவே இல்லை. முதன்முதலில் சைவசித்தாந்தம் மெய்யியல் சிந்தனையாக சிவஞான சுவாமிகளினால் சிவஞான பாடியம் என்ற பெயரால் 18ம் நூற்றாண்டில் வெளிவந்தது. இதைத்தவிர அனைத்து சிந்தனைகளையும் தழுவிச் செல்லுகின்ற தமிழர் அறிவாராய்ச்சியியல் ஆய்வு இன்றுவரை தோன்றவில்லை.

மெய்யியலை உலக நோக்காக கொள்வோமாயின் பௌத்தம், சைவசித்தாந்தம், சமணம் என்பன சார்ந்த மெய்யியலாளர்களை நாம் தமிழ் மரபில் காணலாம். மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் என்பவற்றில் முறையே பௌத்தம், சமணம், சைவசித்தாந்தம் ஆகியவற்றைப் பற்றி அறிய முடியும். அறநெறிக்காலம் என்ற மெய்யியலின் ஒரு பகுதியானது ஒழுக்கம் பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது. மெய்யியலின் ஒரு பிரிவான அழகியலில் தொல்காப்பியத்திலும் சாத்தனாரின் கடந்த நூலும் காணப்படுகிறது. அளவையியல் என்பது மெய்யியலின் ஒரு கூறு. இதனை மணிமேகலையிலும், சிவஞான சித்தியாரிலும் எம்மால் காண முடியும். இவை தவிர சங்ககால நூல்களில் உலகாயுதம், பௌதீகவாதம் என்பன தொடர்பான கருத்துக்களையும் எம்மால் காணமுடியும். தமிழகமும் இலங்கையும் ஐரோப்பிய காலம் தொட்டு ஆங்காங்கே மெய்யியல் சார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலும் மொழிபெயர்ப்பு நூல்களே காணப்படுகிறது. கௌதமரின் நியாய சூத்திரத்திற்கு வாத்சாயனர் விளக்க உரை எழுதினார். இவ்விளக்க உரைக்கு விளக்கமாக உத்தியோகத்தரின் நியாய வார்த்திகம் (கி.பி 6ஆம் நூற்றாண்டு) என்ற நூல் எழுதப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியில் வாசஸ்பதிமிஸ்ரர் தாற்பரியதீபிகை என்ற உரையினை (கி.பி. 841) எழுதினார். தாற்பரியதீபிகைக்கு உதயனர் (கி.பி 1000) தாற்பரியதீபிகைப் பரிசுத்தி எனும் விளக்கம் தந்தார். உதயனர் எழுதிய பிற நூல்களில் நியாய குசுமஞ்சலியும் ஒன்றாகும். பௌத்த, சமண அளவை நூல்களில் திக்னாகரின் (கி.பி. 400) நியாயப் பிரவேசம், பிரமாணச் சமுச்சயம், தரும கீர்த்தியின் பிரமாணபிந்து (கி.பி 650), சிந்த சேனவாகரின் நியாயவாதம் (கி.பி 480-550) என்பவைகள் மிகவும் முக்கியமானவைகளாகும். நியாய சூத்திரத்தையும், வைசேடிக சூத்திரத்தையும் முதல் நூலாகக் கொண்டு காங்கேச உபாத்தியார் (கி.பி 1200) தத்துவ சிந்தாமணி என்ற நூலினை இயற்றினார். அச்சிந்தாமணி நூலுக்கு ரகுநாதசிரோமணி உரை எழுதினார். ரகுநாதசிரோமணி இயற்றிய தீதிதி உரைக்கு பிற்பட்ட காலத்தில் பல உரைகள்

எழுந்தது. குறிப்பாக பவானந்தர், மதுராநாதர், ஐயதேவர் எனும் பட்சதகர், ஜகதீசர், கதாகரர், கிருஷ்ணம்பட்டர், சிவஞான சுவாமிகள், அன்னம் பட்டரின் தருக்கசங்கிரகம் என்ற வட மொழி நூலை மொழி பெயர்த்தார்.

தெல்லிபழை சிவானந்த ஐயர் பதகீர்த்தி நீலகண்டம் என்பவற்றை மொழி பெயர்த்தார். இவை தவிர நாக இரத்தினம் என்பவர் வேதாந்தத்தின் தருக்கம் எனும் நூலை மொழி பெயர்த்துள்ளார். சுவாமி ஞானப் பிரகாசம் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அளவை நூல்களின் விளக்கம் என்ற நூலை வெளியிட்டார். 1950இல் இராமநாதன் என்பவர் அளவையியல் விளக்கம் என்பதை எழுதினார். கணேசபுர கடலோடி அடிகள் சாஸ்திரிகள் வதன்சலி யோகம், சாங்கிய காரிகை, பிரமசூத்திரம், சங்கரண உரை மற்றும் வேதாந்த பிராமண, உபநிடதங்களையும் மொழி பெயர்த்தார். இராமகிருஷ்ண மடத்தினரால் பகவத்கீதை மொழி பெயர்க்கப்பட்டதுடன் வேதாந்தக் கொள்கைகளும் மொழி பெயர்க்கப்பட்டது. கதிரவேற்பிள்ளை என்பவர் மேலைநாட்டுத் தருக்கம் என்ற நூலை வெளியிட்டார். 1950இற்குப் பிறகு இந்தியாவிலும், இலங்கையிலும் பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. தொகுத்து நோக்கும்போது நூல்கள் அனைத்தும் தமிழில் எழுதப்பட்டாலும் தமிழர் அறிவாராய்ச்சியியல் வரலாறு பற்றி பேசியதாக இல்லை.

தமிழர் அறிவாராய்ச்சியியல் வரலாற்றினை மெய்யியல் நோக்கில் அணுகும் போது அதனை கருத்துநிலையாகவும் ஒரு உலகப் பார்வையாகவும் அணுகுதல் வேண்டும் என ஏலவே குறிப்பிட்டோம். மெய்யியலுக்கு இத்தகைய ஒரு விளக்கத்தைக் கொடுப்பது ஏற்புடையதோ என வினவப்படலாம். ஆனால் இத்தகைய அணுகுமுறை ஏற்புடைய ஒன்றே. குறிப்பாக இந்திய தர்சனங்களை மெய்யியலாக நாம் ஆராய்கிறோம் என்றால் அவற்றை ஒரு கருத்து நிலையாகவும் ஒரு உலகப் பார்வையாகவும் நாம் புரிந்து கொள்ளுவதன் மூலமே இந்திய மெய்யியல் பற்றிய ஆய்வுகள் சாத்தியமாகும். கருத்து நிலை என்பது நம்பிக்கைகளின் தொகுதி அவை உண்மை, பொய் பெறுமானம் அற்றவை. அதுமட்டுமல்ல வாழ்க்கை பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் அவை தழுவின. இக்கண்ணோட்டங்கள் நாளுக்கு நாள் வேறுபடலாம். எனவே மாறுபடும் கண்ணோட்டங்கள் ஒன்றை உண்மையாக்குவதோ பெய்யாக்குவதோ இல்லை. மெய்யியலை கருத்து நிலையாக இங்கு புரிந்துள்ளதால் இங்கு மெய்யியல் ஆய்வுகள் எவ்வாறு இருக்கிறது என்பது பற்றிய ஆய்வாக இருக்கின்றதே ஒழிய, எவ்வாறு இருக்கின்றது என்ற ஆய்வு அல்ல. பிறிதொருவிதமாக கூறுவோமாயின் எவ்வாறு இருக்கிறது என்ற ஆய்வு எப்போதும் விபரிப்பு ஆய்வாகவே இருக்கும். எவ்வாறு இருத்தல் வேண்டும் என்ற ஆய்வு நியமங்கள் பற்றிய ஆய்வாக இருக்கும்.

இந்திய மெய்யியலில் தமிழர் அறிவாராய்ச்சியியல் உட்பட முதல்நிலை வினாக்கள் பற்றிய ஆய்வாகவும், அதன் வழி நியமங்கள் பற்றிய ஆய்வாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் அறிவாராய்ச்சியியலை மேற்கூறிய நிலைப்பாட்டில் புரிந்துகொள்வது மெய்யியல் பற்றிய விளக்கத்தில் இருந்து பெறப்படுவதோ அல்லவோ என ஒருவர் வினவலாம். இங்கு முரண்பாடுகள் எதுவும் இல்லை. மாக்சிசம், இருப்புவாதம் என்பனவற்றை எடுத்து நோக்கின் அவை தமது மெய்யியல் சிந்தனைகளை உலகப் பார்வையாகவும் கருத்து நிலையாகவும் அமைவது நாம் அறிந்ததே.

தமிழர் அறிவாராய்ச்சி வரலாற்றை எழுவதிலுள்ள பிரச்சினை சுயமாக மதம் கூறும் அனைத்துக் கருத்துகளையும் தமிழர் நூல் மரபில் பெறமுடியாது. இதனால் பிறர் மதம் தாம் இன்னது என்றோ, எது இன்னது என்று கூறுவதை நாம் முழுமையாக ஏற்கமுடியாது. இந்நிலையில் தமிழர் அறிவாராய்ச்சியியலைப் பற்றி இப்போது சிந்திக்கலாம்.

உலகாயுதத்தை வளர்த்த பிருகற்பதி, "காட்சியளவை" (புலனறிவு) மட்டுமே அறிவிற்குரிய கருவி என வகுத்தார். புத்தர் அது காட்சியளவை (புலனறிவு), உய்த்தறிவு (கருத்தளவை) என இரண்டு எனக் கூறினார். சாங்கியத்தை வளர்த்த கபிலர் அவ்விரண்டுடன் "ஆகமம்" என்னும் ஒன்றையும் சேர்த்து அவை மூன்று என்றார். நையாயிகத்தைப் படைத்த அக்கபாதன் (கவுதமர்) அம்மூன்றுடன் "ஒப்புமை" அளவையைச் சேர்ந்து நான்கென்றார். வைசேடிகத்தைப் படைத்த கணாதர், "குறிப்பு அளவை" என்பதையும் சேர்த்து அவை ஐந்தென்றார். மீமாஞ்சகத்தை வளர்த்த ஃசைமினி, அவ்வைந்துடன் "கூடாமை" எனும் அளவையும் சேர்த்து ஆறென வகுத்தார். அது மணிமேகலை (27,77–85) தருகின்ற விளக்கம். அவ்வகையில் அளவைகளைப் பற்றிய முதன்நிலையாக இருப்பது உலகாயுதமே ஆகும். அத்தகைய அளவையியலின் வீச்சு, தமிழ் மெய்யியலிலும் வலிமையுடன் விளங்குகின்றது. அதனைக் கருதியே, அது அத்தமிழ் மெய்யியலில் அதற்கேயுரியதோர் இடத்தைப பெறுதல் வேண்டும் எனப்படுகின்றது.

வடமொழியாளர்கள், அளவையியலை “நியாயம்” என்றழைப்பர். அளவைகள் ஆறென மீமாஞ்சை ஆசிரியர் ஃசைமினி வகுத்ததாக அறிந்தோம். அதனை, “கிருதகோடி” என்றழைக்கப்பட்ட போதாயனர் எட்டு என்றார். வேதவியாசர் பத்து என்றார். அப்பத்து அளவுகளை, புலனறிவு (காட்சி அளவை), உய்த்தறிவு (கருத்தளவை) அல்லது வழி அளவை, ஒப்புமை (உவமை), மேற்கோள் (ஆகமம்), குறிப்பு (அவாய்நிலை), தகுதி (இயல்பு), உலகுரை (மன்னுரை), கூடாமை (இன்மை), எதிர்நிலை (மீட்சி), இயல்புத் திரிபு என மணிமேகலை கூறுகின்றது.

உலோகாயுதம் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் காட்சியை நிராகரிப்பதன் மூலம் அவர்களது மதமும் தவறானது என விமர்சிக்கப்படுகிறார். இது தமிழர் வரலாற்றில் மட்டுமல்ல இந்திய மெய்யியலிலும் வரலாற்றிலும் காணப்படும் பிரச்சினை. உதாரணமாக உலோகாயுதர் தன்னல இன்பவாதியாக இருந்தனர். பொது நலனில் அக்கறையற்று இருந்தனர் என விமர்சிக்கப்பட்டது. இந்த விமர்சனமும் உலகாயுதர்களுக்கு பொருந்தாது. உலகாயுதர் என்ற பகுதி அரசனின் ஆணையிலேயே நடப்போர் என்று புலன் இன்பத்தில் நாட்டம் கொண்டோர். புறச்சமயத்தினர் என்றும் இவர்கள் விமர்சிக்கப்படுகின்றனர்.

தமிழ் நூல் மரபில் அனுமானக் கொள்கை மிகவும் முக்கியமானதாகும். தர்க்கவியலைப் பண்டை நாளில் அளவைநூல் என வழங்கினர். அதனை “ஏரணம்” என்றும் குறிப்பிட்டனர். அத்தகைய அளவுநூலை பின்னாளில் செப்பமுற வளர்த்தவர்களில் சிறப்பானவர்கள் பௌத்த சமயத்தினராகும். மகாயான பௌத்த சமயப் பிரிவை ஏற்படுத்திய திண்ணாகர் என்னும் தமிழர் சமஷ்கிருதத்தில் நியாய பிரவேசம், நியாயத் துவாரம் என்னும் அளவை நூல்களை எழுதியதை அதற்கொரு சான்றாகக் குறிப்பிடலாம்.

தமிழர் மெய்யியல் மரபில் அனுமானக் கோட்பாடு முக்கியமானதாகும். காட்சியை விட அனுமானத்தை இன்றியமையாத பிரமாணமாகவும் அதுவே அறியும் கருவியாகவும் கூறுவதோடு அவ்வனுமானத்தில் ஏனைய பிரமாணங்கள் யாவும் உட்படுத்தப்படுகின்றது என சுட்டிக்காட்டுகின்றனர். தருக்க சங்கிரக ஆசிரியர் அனுமானத்தை தன் பொருட்டனுமானம், பிறர் பொருட்டனுமானம் என இரண்டு வகையாகப் பிரித்தார்.

ஒருவர் தனது புலன்களினூடாக பெற்றுக் கொள்ளும் அனுமானம் தன் பொருட்டனுமானம் எனலாம். இதனை சுவார்த்த அனுமானம் எனவும் அழைப்பர். இவ் அனுமானம் புலன்களினூடாக உணரத்தக்க அறிவாகும். இது பக்கம், ஏது, திட்டாந்தம் எனும் மூன்று அங்கத்துவங்களைக் கொண்டு சுட்டிக்காட்டப்படுகின்றது. தான் தெரிந்த ஒரு விடயத்தை பிறரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக எடுத்துக்கூறுவது பிறர் பொருட்டனுமானமாகும். இதனை உடன்பாட்டு வடிவிலும் எதிர்மறை வடிவிலும் கூறலாம். இதில் பிரதிக்ஞை, ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் எனும் ஐந்து அங்கத்துவங்களும் முக்கியமானதாகும்.

அறிவு தொடர்பான ஆய்வில் மனிதனால் நிச்சயமான அறிவைப் பெறலாம் என பெரும்பாலான மெய்யியல் சிந்தனை கூடங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. எனினும் அதை பெறுவதற்கான வாயில்கள் எது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளது. பொதுவாக பல்வகையான அறிவின் வாயில்கள் பற்றி பேசப்பட்டாலும் அனுமானம் முக்கியம் பெறுகின்றது.

மெய்யியல் என்பது உண்மை பற்றிய தேடல், ஆய்வு, விமர்சனம், மதிப்பீடு என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. தமிழர் மெய்யியலானது உண்மை பற்றிய தேடலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பழமை இலக்கியங்களிலும், காவியங்களிலும் பல தத்துவம் சார்ந்த கருத்துக்கள் பொதிந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தாலும் இது தொடர்பான ஆய்வுகள் மிகவும் அரிதாக காணப்படுவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.